# சீர்காழி நகராட்சி



**2018—ம் ஆண்டு நவம்பர் மாதம் 22.11.2018 வியாழன் கிழமை காலை 11.00 மணிக்கு சீர்காழி நகராட்சி அலுவலகத்தில் நடைபெற்ற சாதாரனகூட்ட நடவடிக்கை.**

முன்னிலை.திருமதி.மு.அஜிதாபர்வின்.B.sc
தனி அலுவலர் (ம) ஆணையர்
சீர்காழி நகராட்சி.

**பொருள் எண்-1**

நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை—5 அவர்களின் அறிவுறையின்படியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்களின் வலைதள செய்தி நாள்.10.05.2018 படி தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018—2019 ன்கீழ் தார் சாலை மற்றும் சிமெண்ட் சாலை பணிகளுக்கு ரூ.500.00 இலட்சத்திற்கு 3 சிப்பங்களாக பணிகள் மேற்கொள்ள முழுமானியமாக நிதி கோரி திட்ட பிரேரனை தயார் செய்து நிர்வாக அனுமதி பெற கருத்துரு அனுப்பப்பட்டது. நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களின் கடிதம் ந.க.எண்.12981/2018/இ3 நாள்.27.06.2018 ல் அரசு முதன்மை செயலர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின் தலைமையில் 12.05.2018 அன்று நடைபெற்ற TURIP-2018—19 க்கான திட்ட அனுமதி வழங்கும் குழுவில் சீர்காழி நகராட்சிக்கு சாலைப்பணிகளை மேற்கொள்ள **(திட்ட மானிய நிதி —190.00 இலட்சம், மாநில/மத்திய நிதிக்குழு மானிய நிதி—150.00 இலட்சம், மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி—110.00 இலட்சம் மற்றும் நகராட்சி பங்களிப்பு—50.00 இலட்சம் ஆக கூடுதல்—ரூ.500.00 இலட்சம் என்ற விகிதத்தில்)** நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டதை ஏற்று மன்ற ஒப்புதல் பெற்று அனுப்ப கேட்டுக்கொள்ளப்பட்டது. இந்நகராட்சியின் நிதி நிலமையினை கருத்தில் கொண்டு TURIP-2018—19 ன் கீழ் சாலைப்பணிகளை இமற்கொள்ள இயலாத நிலையில் உள்ளதை இந்நகராட்சியின் கடித ந.க.எண்.1426/2018/இ1 நாள்.06.08.2018 ல் இந்நகராட்சியில் பொது நிதியில் போதிய நிதி இல்லாத காரணத்தால் மேற்படி பணிக்கான நிதியினை முழு மானியமாக வழங்கினால் மட்டுமே பணி மேற்கொள்ள இயலும் எனத் தெரிவிக்கப்பட்டது. தற்போது மேற்குறிப்பிடப்பட்ட பணிகளுக்கு நிர்வாக அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில். தற்இபாது இந்நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு அத்தியாவசியமாக மேற்கொள்ளபட வேண்டிய கீழ்கண்ட 9 சாலை பணிகளை ரூ.100.00 இலட்சத்திற்கு கீழ் குறிப்பிடப்பட்டுள்ள நிதிபங்கீட்டின் அடிப்படையில் **(திட்ட அனுதமிக் குழுவில் தெரிவிக்கப்பட்ட நிதிப்பங்கிட்டின் அடிப்படையில்)** செய்ய அனுமதி அளிக்க வேண்டி நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு கருத்துரு அனுப்ப மன்ற ஒப்புதலுக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

எனவே மேற்கண்ட நிதி ஒதுக்கிட்டின்படி கீழ்க்கண்ட விவரப்படி சாலைப்பணிகள் மேற்கொள்ள ரூ.100.00 இலட்சத்திற்கான மதிப்பீட்டிற்கு திட்ட பிரேரணை தயார் செய்து நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், தஞ்சாவூர் அவர்கள் வழியாக நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை—5 அவர்களுக்கு நிர்வாக அனுமதி மற்றும் தொழில் நுட்ப அனுமதி பெறுவதற்கு அனுப்பிவைத்திட பணிவுடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. (ரூ. கோடியில்)

| மதிப்பீட்டு தொகை | தமிழ்நாடு நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்ட மானிய நிதி | மாநில நிதிக்குழு/மத்திய நிதிக்குழு மானிய நிதி | மாநில நிதிக்குழு மானிய ஊக்க நிதி | நகராட்சி பங்களிப்பு |
|---|---|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1.00 | 0.38 | 0.30 | 0.22 | 0.10 |

| வ,எண் | வார்டு எண் | பணியின் விவரம் | நீளம் (கி.மீ) | மதிப்பீட்டு தொகை (ரூ. இலட்சத்தில் ) |
|---|---|---|---|---|
| 1 | 2 | பெத்தடித் தெரு | 0.27 | 16.00 |
| 2 | 4 | வடபாதி மாரியம்மன் கோயில் தெரு | 0.21 | 11.50 |
| 3 | 5 | பாலாஜி நகர் முதல் மற்றும் இரண்டாவது குறுக்குத் தெரு | 0.175 | 9.00 |
| 4 | 20 | வ.ஊ.சி நகர் கிழக்கு மற்றும் மேற்கு தெருக்கள் | 0.29 | 14.50 |
| 5 | 21 | வி.என்.எஸ் நகர் மெயின் ரோடு மற்றும் இரண்டாவது குறுக்குத் தெரு. | 0.25 | 12.00 |
| 6 | 23 | கோவில்பத்து பிள்ளையார் கோவில் தெரு மற்றும் கோவில்பத்து மேலத் தெரு. | 0.32 | 10.00 |
| 7 | 11 | காமராஜர் தெரு. | 0.33 | 15.00 |
| 8 | 12 | புழுகாப்பேட்டை முதல் கொள்ளிடம் முக்கூட்டு வரை. | 0.10 | 4.00 |
| 9 | 18 | பன்னீர்செல்வம் தெரு (சிமெண்ட் கான்கிரிட் சாலை). | 0.21 | 8.00 |
| | | **கூடுதல்** | **2.155** | **100.00** |

தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) 2018–2019–ன்கீழ் ரூ. 100.00 இலட்சத்தை அட்டவணையில் கண்டுள்ளவாறு நிதி பெற்று மேற்கண்ட சாலை பணிகள் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு: 1) மன்றம் அனுமதிக்கலாம்.

2) இந்நகராட்சியின் நிதி நிலைமையினை கருத்தில் கொண்டு அத்தியாவசியமாக மேற்கொள்ளபட வேண்டிய கீழ்கண்ட 9 சாலை பணிகளை ரூ.100.00 இலட்சத்திற்கு மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்.

**(ந.க.எண்–1426/2018/இ1)**

பொருள் எண்-2

தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையில் 2018-19 -ம் ஆண்டிற்கான நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறைக்கான மானியக் கோரிக்கை எண். 34,அறிவிப்பு எண்.14-ல் மாநகராட்சிகள் மற்றும் நகராட்சிகளில் உள்ள அனைத்து வார்டுகளிலும் உயர்தரம் வாய்ந்த குடிநீர் மிகக் குறைந்த விலையில் வழங்க தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic vending centre) நிறுவப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளதற்கிணங்க, நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை மற்றும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் தஞ்சாவூர் ஆகியோரின் அறிவுரையின் படியும் சீர்காழி நகராட்சியில் உள்ள 24 வார்டுகளில் தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் பொது கிணறு மற்றும் ஆழ்துளைக் கிணற்று நீரை ஆதாரமாக கொண்டு தீவிர வடிகட்டுதல் மற்றும் எதிர் சவ்வூடு பரவல் முறையில் சுத்திகரிக்கப்பட்டு பொது மக்களுக்கு வழங்கும் வண்ணம் சுத்திகரிக்கும் இயந்திரம் நிறுவ நகராட்சி ஆணையர் மற்றும் பொறியாளர் ஆகியோரால் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் ஒரு எண்ணிக்கை அமைப்பதற்கு பணியின் அவசர அவசியத்தினை கருத்தில் கொண்டு தனி அலுவலர் அவர்களின் முன் அனுமதி பெற்று 23.08.2018 ல் ஒப்பந்த புள்ளி கோரப்பட்டு 22.09.2018 ல் அன்று ஒப்பந்தப்புள்ளி பெறப்பட்டமைக்கும் தற்சமயம் 24 வார்டுகளில் புதிதாக தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres)அமைத்திடவும் ஆக கூடுதல் 10 எண்ணிக்கை நிறுவிட ஏற்படும் செலவினத் தொகை ஒன்றுக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.18.00 இலட்சம் (ரூபாய் பதினெட்டு இலட்சம்) வீதம் மொத்தம், 7 வார்டுகளில் ரூ. 180.00 இலட்சம் (ரூபாய். நூற்று இருபத்தி ஆறு இலட்சம்) ஆகும்.

இத்திட்டத்தை நிறைவேற்ற மூலதன செலவினத்தை தனியார் தொழில் நிறுவனம் / தொழில்

முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், இயக்குதல் பராமரித்தல் செலவினத்தை பயனாளிகளிடம் இருந்து பெறப்படும் கட்டணத்தில் இருந்து ஈடு செய்து கொள்ளவும், மின் கட்டணத்தை தன்னார்வ தொண்டு நிறுவனம் மூலம் செலுத்தவும், நகராட்சி மூலம் இடம் மற்றும் நீர் ஆதாரம் மட்டும் வழங்க திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

எனவே, நகரில் உள்ள **24** வார்டுகளில் தானியங்கும் குடிநீர் மையங்கள் (Automatic Vending Centres) தனியார் தொழில் நிறுவனங்கள் / தொழில் முனைவோர்கள் CSR மற்றும் இதர தொகையிலிருந்து ஈடு செய்து கொள்ளவும், மேலும், அனுபவம் வாய்ந்த மற்றும் உரிய தொழில் நுட்பநுணுக்கங்களை கொண்ட தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்ய ஏதுவாக, அந்தந்த உள்ளாட்சி அமைப்புகளில் “Expression of Interest” விளம்பரம் செய்து தனியார் தொழில் நிறுவனத்தினை தேர்வு செய்யவும் அனைத்து கீழ்க்கண்ட வார்டுகளிலும் செயல்படுத்தவும், இதற்கான அனுமதி நகராட்சி நிர்வாக ஆணையாளர் சென்னை அவர்களின் அனுமதி பெறவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலககுறிப்பு

**1.** மன்றம் அங்கீகரிக்கலாம்.

(ந.க.எண்.**2807** /**2018**/இ**1**)

பொருள் எண்-3

சீர்காழி நகராட்சியில் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் தானியங்கி நீர் வழங்கும் இயந்திரம் மூலம் (Community Drinking Water Supply System) தயார் செய்து, விற்பனை செய்தல் மற்றும் செய்பணியினை ஒப்படைத்து **10** ஆண்டுகளுக்கு இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை தனியார் வசம் மேற்கொள்ளும் பணிக்கு **24.10.2018** அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்ட தகுதி வாய்ந்த ஒரே நிறுவனத்திடமிருந்து ஒப்பந்தப்புள்ளி வரப்பெற்றதை, மன்றத்தின் முடிவிற்கு வைக்கப்படுகிறது.

1. M/s. Dharana Infrastructure Projects Private Limited,
   AP 887 J Block 1st Street,
   13th Main Road,
   Anna Nagar, Chennai – 600 041

**Price Schedule**

| Sl.No. | Description | Rate to be remitted to the Municipality | Rate to be charged for sale to public |
|---|---|---|---|
| 1 | Establishment of 1000 Ltr./Hr. Capacity Community Drinking Water System through Reverse Osmosis with UV treatment at New Bus Stand in Sirkali Municipality. | Re.1.00/20 liters sold at plant site<br>Rs.2.00/20 liters sold at the door step.<br>10 paise for 1 litre water sold on vending machine. | Rs. 6.90 at plant site.<br>Rs.20.00 at door step.<br>Re.1 for water sold from vending machine (chilled or non chilled) |

அலுவலக குறிப்பு: மேற்கண்ட பணிக்கு **24.10.2018** அன்று ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றது. இத்திட்டம் அரசின் சிறப்புத்திட்டம் என்பதால் M/s. Dharana Infrastructure Projects Private Limited, Chennai என்ற நிறுவனத்தின் ஒப்பந்தப்புள்ளி விலையினை ஏற்று மன்றம் அங்கீகரிக்கலாம்.

பொருள் எண்-4

பொதுசுகாதாரம் **–** சீர்காழி நகராட்சி – தூய்மை இந்தியா திட்டத்தின் கீழ் திறந்த வெளியில் மலம் கழித்தலால் ஏற்படும் சுகாதார சீர்கேடு திடக்கழிவுகளை குறைத்திட வழிமுறைகள் திடக்கழிவுகளை மறுசுழற்சி செய்தல் மீண்டும் பயன்படுத்துதல் மற்றும் இறுதியாக்கம் செய்தல் ஆகியவை குறித்தான விழிப்புணர்வை ஏற்படுத்தும் பணிகளை மேற்கொள்ள **6** எண்ணிக்கையில் பரப்புரையாளர்கள் மற்றும் **1** எண்ணிக்கையில் மேற்பார்வையாளர்கள் ஆகியோர்களை கடந்த **1** வருடமாக ஒப்பந்த அடிப்படையில் பணியமர்த்தப்பட்டு அதற்குண்டான செலவீனத்தை மத்திய மாநில அரசு நிதி மூலம் பணிகள் நடைபெற்றுவருகிறது.

இவர்களது ஒப்பந்த பணிக்காலம் **30.09.20158** தேதியுடன் முடிவடைகிறது. இந்நிலையில் நகராட்சி

நிர்வாக ஆணையர் சென்னை அவர்களின் மின்னஞ்சல் கடிதம் ந.க.எண்—26458/2016/தி1 நாள்— 31.07.2018 ன்படி மேற்கண்ட பணியாளர்களை பணிக்காலத்தை அக்டோபர் 2018 முதல் டிசம்பர் 2018 வரை மேலும் 3 மாதங்களுக்கு பணி நீட்டிப்பும் மேற்கொண்டு அரசிடமிருந்து நிதி பெறப்பட்டவுடன் அதனை ஈடுசெய்து கொள்ளலாம் என தெரிவிக்கப்பட்டு உள்ளது.

எனவே நகராட்சி நிர்வாக ஆணையர் சென்னை அவர்களது மேற்கண்ட கடிதத்தில் தெரிவித்துள்ளவாறு 3 மாதத்திற்கு ஆகும் செலவீனத் தொகை ரூ.3.00 இலட்சத்தை நகராட்சி பொது நிதியில் இருந்து செலவீனம் மேற்கொள்ள அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலககுறிப்பு

1. மன்றம் அங்கீகரிக்கலாம்.
2. பணியின் அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொள்ள மன்றம் அனுமதி வழங்கலாம்.

(ந.க.எண்.2176/2017/எச்1)

பொ ருள் ண்-5

பொது சுகாதாரம் – சீர்காழி நகராட்சி – கொசுப்புகை மருந்து அடிக்கும் 2 இயந்திரத்திற்கு பழுது நீக்கம் பணிகள் மேற்கொள்ள 10.11.2018 அன்று விலைப்புள்ளி கோரியதில் கீழ்கண்ட மூன்று விலைப்புள்ளிகள் வந்துள்ளதை பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் மற்றும் முகவரி | விலைப்புள்ளி தொகை |
|---|---|---|
| 1 | சிஸ்டம் எஞ்ஞினியரிங், No.1 அன்னை சத்தியா நகர், மெயின்இராடு, செந்தமிழ் நகர், ராமாபுரம், சென்னை—089 | ரூ.11,440/— |
| 2 | விக்னேஸ்வரி இன்டஸ்டிரியல் புரடியூஸ், பொன்னம்பலம் சாலை, கே.கே நகர், சென்னை—078 | ரூ.12,320/— |
| 3 | S.N எண்டர் பிரைசஸ், பிளாட் எண்—6, கதவு எண்—1G ராஜாஜி அவன்யூ, வலசரவாக்கம், சென்னை—087 | ரூ.12,470/— |

அலுவலக குறிப்பு : 1. மன்றம் அனுமதிக்கலாம்.

2. மேற்கண்ட மூன்று விலைப்புள்ளிகளில் வரிசை எண்.1 ல் குறிப்பிட்டுள்ள சிஸ்டம் எஞ்ஞினியரிங், No.1 அன்னை சத்தியா நகர் ராமாபுரம், சென்னை—089 என்பவர் கொடுத்துள்ள குறைந்த விலைப்புள்ளியை ஏற்கலாம் மேற்படி தொகையை பொது நிதியிலிருந்து செலவு செய்ய அனுமதிக்கலாம்.

ந.க.எண்.2317/2017/ எச்.1

பொ ருள் ண்-6

சீர்காழி நகராட்சி – பொது சுகாதாரப் பிரிவில் ஈசானிய தெரு கலவை உரத்திடலில் குவியல்களாக காணப்படும் குப்பை திட்டுகள் மண் மேடுகள் உள்ளிட்ட திடக்கழிவு மேலாண்மை பணிகள் மேற்கொள்ள ஏதுவாக JCB இயந்திரம் மற்றும் டிராக்டர் வாகனங்கள் வாடகை அடிப்படையில் அமர்த்தி கலவை உரத்திடலில் பணிகள் மேற்கொள்ள 31.10.2018 ல் ஒப்பந்தபுள்ளி கோரியதில் கீழ்கண்ட இரண்டு ஒப்பந்த புள்ளிகள் வந்துள்ளதை பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ.எண் | ஒப்பந்ததாரர் பெயர் | ஒப்பந்தபுள்ளி தொகை | டேவணித் தொகை |
|---|---|---|---|
| 1 | திரு.ஆர்.தன்ராஜ்<br>கீழ தென்பாதி<br>சீர்காழி | JCB இயந்திரம் வாடகை 1 மணி நேரத்திற்கு ரூ.800 டிராக்டர், ஒட்டுனர் மற்றும் கூலி உட்பட ஒரு நாளைக்கு ரூ.2700 | ரூ.750<br>செ.சீ.எண்.0001946<br>நாள்.29.10.2018 |
| 2 | திரு.ஆர்.கலைவாணன்<br>பிடாரி கீழவீதி<br>சீர்காழி | JCB வாடகை 1 மணி நேரத்திற்கு ரூ.900 டிராக்டர்,ஒட்டுனர் மற்றும் கூலி உட்பட ஒரு நாளைக்கு ரூ.2900 | ரூ.750<br>செ.சீ.எண்.0001749<br>நாள்.29.10.2018 |

| | |
|---|---|
| | அலுவலக குறிப்பு : **1.** மேற்கண்ட இரண்டு ஒப்பந்தபுள்ளியில் வரிசை எண்.**1** ல் குறிப்பிட்டுள்ள திரு.ஆர்.தன்ராஜ் கீழதென்பாதி என்பவர் கொடுத்துள்ள குறைந்த ஒப்பந்த புள்ளியை ஏற்கலாம்.<br>**2.** பருவ மழை தொடங்கி விட்டதால் அவசர அவசியம் கருதி மன்ற ஒப்புதலை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்களிடம் முன் அனுமதி பெற்று பணிஆணை வழங்கி. பணிகள் மேற்கொள்ள மன்றம் அனுமதிக்கலாம். ந.க.எண்.518/2018/ எச்.1 |
| பொருள் எண்-7 | சீர்காழி நகராட்சி – தூய்மை இந்தியா திட்டம் (திடக்கழிவு மேலாண்மை திட்டம்) (M.C.C)- **2018–19** ன் கீழ் நுண் உரம் செயலாக்கமையம் அமைத்திட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை**–09.** அவர்கள் மூலம் செய்திதாள் விளம்பரம் **26.08.2018** அன்று செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.**69,300/–** மற்றும் Expression of Interest (EOI) Water ATM **2018-19** ன் கீழ் அமைக்கும் பணி செய்திட ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பினை இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை**–09.** அவர்கள் மூலம் செய்திதாள் விளம்பரம் **29.09.2018** அன்று செய்யப்பட்டதற்கான பட்டியல் தொகை ரூ.**57,383/–** வரப்பெற்றுள்ளது. ஆக கூடுதல் ரூ.**1,26,683/-** இயக்குநர், செய்தி மக்கள் தொடர்பு துறை, **(Accord)** சென்னை**–09.** அவர்களுக்கு பொது நிதியில் இருந்து வழங்கிட மன்றத்தின் அனுமதிக்கு வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்-8 | நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை. அவர்களின் அறிவுரையின் படி சீர்காழி நகராட்சியில் உள்ள **24** வார்டுகளிலும் Community Drinking Water Supply System (குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்துடன் கூடிய Water ATM) அமைத்திட இடம் தேர்வு செய்ய தெரிவித்ததற்கு இனங்க நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் நேரில் ஆய்வு செய்து பொது மக்களுக்கு பயன்படும் வகையில் 7 இடங்கள் தேர்வு செய்து முதற்கட்டமாக புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அமைத்திட முடிவு செய்யப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரி பணி உத்திரவு வழங்கப்பட்டுள்ளது. மேற்படி பணிக்கு இந்நகராட்சி மூலம் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் ஆழ்துளை கிணறு அமைத்துதர வேண்டியது அவசியமாகிறது. எனவே தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**2.60** இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்-9 | சீர்காழி நகராட்சி பொறியியல் பிரிவு, குடிநீர் திட்ட பிரிவில் பராமரிக்கப்பட்டுவரும் நகராட்சி பகுதிகளில் **24** வார்டுகளிலும் உள்ள கைபம்புகள், பொது குழாய்கள், நகராட்சி பள்ளிகள், நகராட்சி அலுவலகம் மற்றும் சிறு மின்விசை பம்புகள் அகியவற்றை பழுது நீக்கம் செய்திட தேவையான பம்பு சாமான்கள் கொள்முதல் செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீடு ரூ.**1.50** இலட்சத்தினை இந்நகராட்சி பொது நிதியில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்-10 | சீர்காழி நகராட்சி கல்வி வரி நிதி திட்டம் **-2018-19-**ன் கீழ் நகராட்சிக்கு சொந்தமானதும் பராமரிப்பு பணி மோற்கொண்டு வரும் துறையூர் நகராட்சி தொடக்கப்பள்ளியின் தரை தளம் மேற்கூரை, சுற்றுச் சுவர் மற்றும் கழிவறை ஆகியவை முற்றிலும் பழுதடைந்துள்ளதாக அப்பள்ளி தலைமை ஆசிரியரிடம் வரப்பெற்ற கடிதத்தின் அடிப்படையில் நகராட்சி ஆணையர் மற்றும் நகராட்சி பொறியாளர் அவர்களால் நேரடி ஆய்வு செய்ததை தொடர்ந்து மேற்படி பள்ளி கட்டிடம் மிகவும் பழுதடைந்து உள்ளது தெரியவந்ததால் மாணவ, மாணவிகளின் கல்வி நலன் கருதி மேற்படி பள்ளியினை பராமரிப்பு பணி செய்வது மிகவும் அவசர அவசியமாகிறது. எனவே அதற்காகும் உத்தேச மதிப்பீடு ரூ.**4.00** இலட்சத்தினை கல்வி வரி நிதியில் மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். |
| பொருள் எண்-11 | சீர்காழி நகராட்சி **2018-19** ஆம் ஆண்டிற்கான **14** வது நிதிகுழு (**14**th CFC Service Level Bench Mark) தயார் செய்யப்பட்டு நாகப்பட்டினம் மாவட்ட அரசிதழில் (Nagapattinam District Gazette) வெளியிடு வதற்கான பட்டியல் தொகை ரூ.**4200/-** கிளை மேலாளர், அரசு கிளை அச்சகம், |

| | |
|---|---|
| | புதுக்கோட்டை-622001 அவர்களிடமிருந்து வரப்பெற்றதை நகராட்சி பொது நிதியில் இருந்து கருவூலம் மூலம் செலுத்திட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : 1) மன்றம் அனுமதிக்கலாம்.<br>(ந.க.எண்-2004/2016/இ1) |
| பொருள் எண்-12 | சீர்காழி நகராட்சி எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்கு பாதுகாக்கப்பட்ட குடிநீர் சித்தமல்லி தலைமை நீரேற்று நிலையத்திலிருந்து அலுவலக வளாகத்தில் அமைந்துள்ள மோட்டார் அறையில் இருந்து தரைமட்ட நீர்தேக்க தொட்டியில் இருந்து மேல்நிலை நீர்தேக்க தொட்டி மற்றும் V.O.C நகரில் அமைந்துள்ள மேல்நிலை நீர்தேக்க தொட்டிகள் மூலம் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி மோட்டார் அறையிக்கு மின்சாரம் வழங்கப்பட்டு வரும் மின் மின்மாற்றியில் அடிகடி மின் அழுத்தம் குறைவு மற்றும் அதிகமாக வருவதால் மின் மோட்டர்கள் அடிகடி பழுதடைந்து வருகிறது இதனால் பொது மக்களுக்கு தடையின்றி குடிநீர் வழங்குவது சிறமமாக உள்ளது எனவே நகராட்சிக்கு சொந்தமான கட்டிடத்தில் உரிய மின் இணைப்பு எண்கள் - 111, 112 மற்றும் 1234 ஆகிய மின் இணைப்புகளுக்கு L.T.C.T சர்வீஸ் மூலம் மின் மாற்றி (Transformer) அமைப்பது அவசியம் என உதவி மின் பொறியாளர், இயக்குதலும், பராமரித்தலும் (நகரம்) தமிழ்நாடு மின்சாரவாரியம் சீர்காழி. அவர்களால் தெரிவிக்கப்பட்டதை தொடர்ந்து. நகராட்சி அலுவலகத்திற்கு தனியாக ஒரு மின்மாற்றி அமைக்கவும் அதற்காகும் செலவினத்தை நகராட்சி பொது நிதியில் மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.<br>அலுவலக குறிப்பு : மன்றம் அனுமதிக்கலாம். (ந.க.எண்-120/2001/இ1) |

(ஒம்) . திரு.மு.அஜிதாபர்வின்.B.sc.,
தனி அலுவலர் மற்றும் ஆணையர்
சீர்காழி நகராட்சி.

இடம்–சீர்காழி
நாள்–22.11.2019

/உண்மை நகல்/

ஆணையர்
சீர்காழி நகராட்சி.